# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2312/14 - 2022 දෙසැම්බර් මස 27 වැනි අඟහරුවාදා - 2022.12.27

*2312/14 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78*(xv)(ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளை மூலம் இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும்) 1995, நவெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(1) அட்டவணையில் நிரல் I இலும் அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற (2018, ஒகத்து மாதம் 1 ஆந் திகதிய 2082/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) "மருத்துவ பீடம்" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தையும் பதிவுகளையும் சேர்ப்பதன் மூலமும் :-

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| கணினி பீடம் | 1. மென்பொருள் பொறியியல் துறை |
| | 2. தரவு விஞ்ஞானத்துறை |
| | 3. கணக்கிடலும் தகவல் முறைமைகளும்.". |


1A - PG 6124 — 457 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) மேலே சொல்லப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இலும் அதற்கான நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற (2011, பெப்புருவரி மாதம் 1 ஆந் திகதிய 1691/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) "பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| "*நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| பிரயோக விஞ்ஞானங்கள் | 1. இயற்கை வளங்கள் துறை<br>2. பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் துறை<br>3. உணவு விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் துறை<br>4. விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழில் கல்வித்துறை.". |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, திசெம்பர் 14.

EOG 12-0348

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.